**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், பங்குனித்திங்கள் 19 ம் நாள்

**இ.ம.எண். 6/2026**

**in**

**அ.வ.எண். 29/2018**

1. செல்லம் (இறந்துவிட்டார்)
2. சதீஸ்குமார்
3. மணிமேகலை
4. ரமேஷ்குமார்
5. P.தெண்டபாணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஜெயக்கண்ணன்
2. ராஜாத்தி ... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.லிங்கசாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரையை மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்த நிலையில் தாவா சொத்தை பொறுத்து 5ம் மனுதாரர் கடந்த 06.02.2018ம் தேதி 1 முதல் 4 மனுதாரர்களிடமிருந்து உரிய பிரதிபலனுக்காக கிரையம் பெற்றுள்ளார். மேற்படி கிரைய ஆவணமும் காங்கயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.574/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 5ம் மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவும் இ.ம.எண்.6/2025 என நெம்பராகி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

ii) மேற்படி அசல் வழக்கை 1 முதல் 4 மனுதாரர்கள் தாக்கல் செய்தபோது மேற்படி தாவா சொத்தானது அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாக கூறி பரிகாரம் கோரியிருந்தார்கள். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு கடந்த 06.02.2018ம் தேதி தாவா சொத்தை மனுதாரருக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தின் மீது 1 முதல் 4 மனுதாரர்கள்/வாதிகளுக்கு

எவ்வித உரிமையும் இல்லை. அதனால் தாவா சொத்து 5ம் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என வழக்குரையில் பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு திருத்தம் செய்யாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த இழப்பும் கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும். வழக்குரையை திருத்தம் செய்வதால் வழக்கின் தன்மையும் மாறாது. ஆகவே வழக்குரையை திருத்தம் செய்வது அவசியமாகும். எனவே இம்மனுவில் கண்டுள்ளவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

2. <u>2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:–

i) மனுதாரர்கள் மனு பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு வாதிகள் தரப்பில் வேண்டுமென்றே பல வாய்தா பெறப்பட்டு இறுதியாக கடந்த 02.08.2023ம் தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காததால் மேற்படி அசல் வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னிட்டு 1 முதல் 4 வாதிகள் தாக்கல் செய்த இ.ம.எண்.385/2023ல் ஏற்பட்ட உத்தரவின் பேரில் அசல் தாவா மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தாவா சொத்தை கடந்த

06.02.2018ம் தேதி 5ம் வாதிக்கு 1 முதல் 4 வாதிகள் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

iii) பின்னிட்டு கடந்த 7-1/2 வருடங்களுக்கு பின் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை செய்யும் வரை தாவா சொத்து 1 முதல் 4 வாதிகள் சுவாதீனத்தில் அனுபவித்து வருவதாக சாட்சியையும் அளித்துவிட்டு பின்னிட்டு 1 முதல் 4 வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் அதனால் தாவா சொத்து 5ம் வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும் கூறியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. தற்போது கிரையம் பெற்று 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் வழக்குரையில் பரிகாரத்தை திருத்தம் செய்ய மனுதாரர்கள் காலவரையறை சட்டப்படி தடைபடுகிறார்கள். தற்போது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் வாதிக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டதாகவும் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது.

iv) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதியை வீண் அலைக்களிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் 1 முதல் 4 வாதிகள் தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துவிட்டு தற்போது 8 ஆண்டுகள் கழித்து புதிதாக சேர்க்கப்பட்ட 5ம் வாதிக்கு மட்டும் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று பரிகாரத்தில் திருத்தம் செய்ய இயலாது. மேலும் மனுதாரர் 8 ஆண்டுகள் காலதாமதத்திற்கு எந்த காரணமும் கூறவில்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் தாவா சொத்தை பொறுத்து 5ம் மனுதாரர் கடந்த 06.02.2018ம் தேதி 1 முதல் 4 மனுதாரர்களிடமிருந்து கிரையம் பெற்று 5ம் மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி இ.ம.எண்.6/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு கடந்த 06.02.2018ம் தேதி தாவா சொத்தை மனுதாரருக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தின் மீது 1 முதல் 4 மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் அதனால் தாவா சொத்து 5ம் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என வழக்குரையில் பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும் எனவே இம்மனுவில் கண்டுள்ளவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கிரையம் பெற்று 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் வழக்குரையில் பரிகாரத்தை திருத்தம் செய்ய மனுதாரர்கள் காலவரையறை சட்டப்படி தடைபடுகிறார்கள் என்றும் தற்போது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு

எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் வாதிக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டதாகவும் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 14.06.2018 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 09.12.2022 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 02.08.2023 அன்று வாதிகள் தரப்பில் விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு பின்னிட்டு இ.ம.எண்.385/2023 மனுவில் 30.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அசல் வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.09.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 06.10.2025 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணையின் போது பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 06.11.2025 அன்று 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள அனுமதிகோரி இ.ம.எண்.5/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 30.01.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசல் வழக்கில் 5ம் பிரதிவாதி கட்சி சேர்க்கப்பட்டு, கடந்த 13.02.2026 அன்று அசல் வழக்கானது திருத்தம்

செய்யப்பட்டு, கடந்த 25.02.2026 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 07.03.2026 அன்று இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதிகோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த திருத்தல் மனுவில் வழக்குரை பரிகாரத்தில் வழக்குரை பி பட்டியல் சொத்து 5ம் வாதிக்கு தனிமையில் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய வேண்டுமாயும் என திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 06.02.2018 தேதியில் இம்மனுவின் 5ம் மனுதாரருக்கு தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 4 மனுதாரர்கள்/1 முதல் 4 வாதிகளால் கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதி கோரி இ.ம.எண்.5/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 30.01.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் 5ம் வாதி அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர்கள் கடந்த 06.02.2018 தேதியில் 5ம் மனுதாரருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ள நிலையில் வழக்குரை பி பட்டியல் சொத்து 5ம் வாதிக்கு தனிமையில் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரத்திற்காக

அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் அசல் வழக்கானது மனுதாரர்களால் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது தாவா பி அட்டவணை சொத்து 5ம் வாதிக்கு தனிமையில் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டும் என்று இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் விபரங்கள் அசல் வழக்கின் அடிப்படைத் தன்மையை மாற்றும் வகையிலோ புதிய வழக்கை தோற்றுவிக்கும் வகையிலோ இல்லை. மேற்படி திருத்தத்தை செய்யும் பட்சத்தில் தான் அசல் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் இந்த திருத்தல் மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு மனுதாரர்கள்/வாதிகள் வசமே உள்ளது.

9. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கிரையம் பெற்று 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் வழக்குரையில் பரிகாரத்தை திருத்தம் செய்ய மனுதாரர்கள் காலவரையறை சட்டப்படி தடைபடுகிறார்கள் என்றும் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் வாதிக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டதாகவும் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும்

வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், திருத்தல் மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்கள் வசமே உள்ளது என்பதாலும், மேற்படி வழக்குரை திருத்தல் பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பொறுத்து இரு தரப்பு சாட்சியங்களுக்கு பின்னிட்டு அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும் மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது கடந்த 2018 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் அசல் வழக்குரையில் விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்ய வேண்டி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 07.04.2026 ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 07.04.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.04.02 18:02:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.04.02 18:02:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.